OS.No. :69/2023

நாள் : 15.10.2025

பி.வா.சா. :1

பெயர் :நசீர் அலி, த/பெ. முகமது இஸ்மாயில்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்சி**

என்னுடைய மனைவி மற்றும் என் சகோதரன் மனைவி நகையை வைத்து குடும்ப செலவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு செலவு செய்த விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. எனக்கு ஒரே சகோதரி இருந்தார். அவர் 2003ல் இறந்துவிட்டார் அப்பா, அம்மா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். வாதி இந்தியா வரும்போதெல்லாம் அம்மா, அப்பாவுடன் இருந்து அவர்களை பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திய விதத்தில் பல லட்சம் செலவு செய்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு முதல் விசாரணையில் சொல்லவில்லை. என் அப்பாவின் பணத்தில் நான் சென்று அந்த வழக்கை நடத்தி வந்தேன். பிவாசா 2 ஆவணத்தின்படி 17.07.2023 ல் பத்துவா வாங்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது என் பெற்றோர்கள் உயிருடன் இல்லை. அதற்கான விவரங்களை நானும் என் சகோதரனும் சொன்னோம். வாதியை பற்றி தவறான விவரங்கள் சொல்லி பத்துவா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வாறு ஷரியத் சட்டத்தில் அத்தகைய சட்டமுறை இல்லை என்றால் என்றால் சரியல்ல. ஆகவே என் அண்ணனுக்கு சொத்தில் பாகம் கொடுக்ககூடாது என்பது தான் என் நிலைப்பாடு. 1ம் பிரதிவாதி என் அண்ணனுக்கு சொத்து கொடுக்கலாம் என்ற நிலைப்பாட்டில் உள்ளார் என்றால் சரியல்ல. நான் தேவையில்லாமல் வழக்காடி எல்லோரையும் வருத்தப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல.